

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளான நேற்று கீழ்பென்னாத்தூரில் இருந்து ஊர்வலமாக சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்திவிட்டு பின்னர் கீழ்பென்னாத்தூர் பேருந்து நிலையம் அருகே பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார் தமிழ்நாடு மேனாள் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி. உடன் நகர தி.மு.க. சார்பில் சி.கே.அன்பு ஒன்றியச் செயலாளர்கள் ஆரஞ்சி ஆறுமுகம், வி.பி.அண்ணாமலை, சி.மாரிமுத்து, ராமஜெயம், இராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் பா.முருகையன் மற்றம் பொதுக்குழு உறுப்பினர் பாலு, மங்கலம் பிரபாரகன், ஒன்றிய துணைச் செயலாளர் சிவக்குமார், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் தமயந்தி ஏழுமலை, மாவட்டப் பிரதிநிதி தேவேந்திரன், குப்புசாமி, வரதராஜன், பேரூராட்சித் தலைவர்கள் சரவணன், கௌரி நடராஜன், மாவட்ட மகளரணி அமைப்பார் நித்தியா, அருமை காந்தி, சுந்தரமூர்த்தி, லோகிதாஸ், ஜி.டி.வினோத், ஜி.கே.ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் ஜப்பார், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், சின்னா, சுரேஷ் இளங்கோ, இளைஞரணி அமைப்பாளர் வினோத், சதஷ், சூரியா, அன்பு பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள்... முதல் பக்கத் தொடர்ச்சி

### கலைஞர் நினைவிடத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மரியாதை!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

### ஓமந்தூரார் தோட்டத்தில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்தார்!

தொடர்ந்து சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுரு வச் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### முரசொலி வளாகத்தில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார்!

இந்நிகழ்வினை அடுத்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

### அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

அதனையடுத்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் பேரறிஞர் அண்ணா அவர் களின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

### அன்பகத்தில் தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்தார்!

இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வரலாற்றின் முக்கிய நிகழ்வாக, கழக இளைஞர் அணியின் தலைமையகம் அமைந்துள்ள "அன்பகம்" வளாகத்தில் அமைக்கப் பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து சிறப்பித்தார். மேலும் 75 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

மேலும் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதுபோது இயக்குநர் அமிர்தம் உடன் இருந்தார். அதே போன்று சி.ஐ.டி.காலனி கலைஞர் இல்லத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார். அதுபோது திருமதி இராஜாத்தி அம்மையார் உடன் இருந்தார்.

இந்நிகழ்வுகளில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., மு.பெ.சாமிநாதன் மற்றும் நே. சிற்றரசு உள்பட மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என்று பெருந்திரளாக கலந்து கொண்டு கலைஞர் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்தனர்.

### தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு கொண்டாட்டம்!

இதே போன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர், பொதுமக்கள், கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்தும், இனிப்புகள் வழங்கியும், ஏழை எளியோருக்கு நல உதவிகள், அறுசுவை உணவு வழங்கியும் எழுச்சியுடன் நேற்று கொண்டாடி மகிழ்ந்து கலைஞர் புகழ் பாடினர்!

---

### சமூகநீதிப் போர்க்களத்தின் சரித்திர நாயகர்!

## அருந்ததியர் வாழ்வுரிமை மீட்ட 'கலைஞர்' வாழ்கவே!



தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சூறாவளியில் கிளர்ந்தெழுந்து, ஒடுக்கப்பட்டோரின் விடியலுக்காகத் தன் வாழ்நாளெல்லாம் பேனா முனையால் பேரரசு நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் இன்று!

"சமூகநீதி என்பது வெறும் வார்த்தையல்ல; அது ஒடுக்கப்பட்ட கடைசி மனிதனுக்குமான அதிகாரப் பகிர்வு" என்பதை உலகிற்கு உணர்த்தியவர் கலைஞர்.

சமூகத்தின் ஆகக்கடைசி வரிசையில், தீராத துயரிலும் சுமையிலும் தள்ளப்பட்டிருந்த அருந்ததியர் சமூகத்தின் அழுகுரல் கேட்டு, எவராலும் அசைக்க முடியாத 3% சதவிகித அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டை வழங்கி, எங்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு கதவுகளைத் திறந்து வைத்த 'சமூகநீதிச் சூரியன்' அவர்.

பெரியார் கண்ட சாதி ஒழிப்புப் பாதையில், பட்டியலின மக்களின் Internal Reservationஐ சாத்தியமாக்கி, அருந்ததியர் விடியலுக்கு வித்திட்ட அந்தத் தன்னிகரில்லாத் தலைவரை இந்நாளில் நெஞ்சாரப் போற்றுகிறோம்.

பெரியாரியக் களத்தில் நின்று, கலைஞர் ஏற்றி வைத்த சமூகநீதிச் சுடரை இன்னும் பிரகாசமாக ஏந்தி நடப்போம்!

ஆதித்தமிழர் நெஞ்சங்களில் என்றும் வாழும் முத்தமிழறிஞருக்கு வீரவணக்கமும், பிறந்தநாள் வாழ்த்துகளும்!



**இரா.அதியமான்**
நிறுவனர் தலைவர்
ஆதித்தமிழர் பேரவை
3.6.2026

---


### குர்பானி விவகாரம்:

## த.வெ.க. அரசு போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது?

### திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

**சென்னை, ஜூன் 4 -**

**குர்பானி விவகாரத்தில் த.வெ.க. அரசும் அதன் முதலமைச்சர் ஜோசப் விஜய்யும் போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது? என்று திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் - முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் அறிக்கை கேள்வி எழுப்பியுள்ளார்.**



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

சிறுபான்மை இசுலாமிய சமுதாய மக்களின் காவல் அரணாக விளங்கிய தி.மு.க. அரசு இருந்தவரையில் எவ்வித தடையும் தடங்கலுமின்றி நடைபெற்று வந்த பக்ரீத் திருநாள் குர்பானி வழங்கும்நிகழ்வுகளுக்கு, முதன்முறையாக த.வெ.க. ஆட்சியில் இடையூறு ஏற்பட்டு, மக்களின் மனத்தில் அழியா வடுவாக மாறியுள்ளது.

இந்த வடுவை சிறுபான்மையின மக்களுக்கு ஏற்படுத்தி விட்டுத்தான், திருச்சிக்குச் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அவர்கள், "மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருப்பேன்" என்று வெற்றுக் கோஷம் எழுப்பினார்.

காட்சிகளில் நடிப்பதும் ஆட்சி செய்வதும் வெவ்வேறானவை என்பதையே அறியாமல் இருக்கும் அவர், பக்ரீத் தினத்தில் தனிக்குழுக்கள் அமைத்து குர்பானிக்கு தடை ஏற்படுத்தியுள்ளார். போலீசை வைத்து அரட்டி உருட்டி மிரட்டி அந்த திருநாளைச் சோக நாளாக்கிய முதலமைச்சர், ஆட்சி பொறுப்பேற்ற சில நாட்களிலேயே சிறுபான்மையினரின் சுதந்திரத்தில் கைவைத்து விளையாடி விட்டார் என ஒவ்வொரு சிறுபான்மையினரின் மனதிலும் வேதனைத் தீயாகக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

"எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல்" இப்போது அடுத்த கட்டமாக, நீதிமன்றத்தில் அரசின் சார்பில் "பொது இடங்களில் குர்பானி கொடுப்பதற்குத் தடை விதித்து உயர்நீதி மன்றம் அளித்த உத்தரவைக் கவனமாகவும் கண்ணும் கருத்துமாகவும் நிறை வேற்றியுள்ளோம்" எனத் தீர்ப்பை நிறைவேற்றியதற்கான அறிக்கையையும் தாக்கல் செய்திருக்கிறது. சிறுபான்மையினர் நலனில் பதவியேற்ற சில நாட்களில் த.வெ.க. அரசின் உண்மை முகம் வெளிச்சத்திற்கு வந்து விட்டது. "பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது" என்பது போல் முதலமைச்சரின் இரட்டை வேடமும் வெளியே வந்து விட்டது.

ஐ.யூ.எம்.எல். சார்பில் த.வெ.க. அரசில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு ஷாஜஹான் அவர்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போகிறோம் என்கிறார். போலீசை வைத்து குர்பானி நடத்த விடாமல் அடக்குமுறை செய்த போது இந்த அமைச்சர் எங்கே உறங்கிக் கொண்டிருந்தார்? ஏன் முதலமைச்சரை உடனே சென்று சந்தித்து இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று கூறவில்லை? சிறுபான்மையினர் மீது போலீஸ் அடக்குமுறையை கைவிடுங்கள் என ஏன் கோரவில்லை? அமைதியாக இருந்து குர்பானியை தடுத்து, அதைத் தடுத்த தீர்ப்பையும் போலீஸ் செயல்படுத்த விட்டு, எல்லாம் முடிந்த பிறகு இப்போது அப்பீல் செய்வேன் என அமைச்சர் கூறுவதற்குக் கூச்சப்பட வேண்டாமா? ஏற்கனவே கிறித்தவ மக்களுக்கு எதிரான FCRAவிற்கு எதிராக ஒரு வார்த்தை கூட கூறாமல், ஒரு கண்டனத்தைக் கூட விடுக்காமல் அமைதி காத்தவர்தான் இதே முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய்.

அவரை நம்பி மதச்சார்பற்ற கொள்கையை நிலைநாட்டப் போகிறோம், பா.ஜ.க ஆட்சிக்கு வருவதை தடுக்கப் போகிறோம் என்று ஓடோடிச் சென்று ஆதரவளித்து அமைச்சர் பதவிக்கு வந்த ஐ.யூ.எம்.எல் சிறுபான்மையின மக்களைக் காப்பாற்றும் லட்சணம் இது தானா?


குர்பானி விவகாரத்தில் நீதிமன்றத்தில் "தீர்ப்பை நிறைவேற்றி விட்டோம்" எனவும், "தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு" எனவும் த.வெ.க. அரசும், அதன் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய்யும் போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது? இசுலாமிய மக்களின் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமா?

---

### விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா!

### இரா.சேதுநாதன் - முன்னணியினர் பங்கேற்பு!



விழுப்புரம், ஜூன் 4-

கூட்டேரிப்பட்டு தேசிய நெடுஞ்சாலை நான்கு முனை சந்திப்பு அருகில் கழக இரு வண்ணக் கொடிகள் நட்டு பந்தல் அமைத்து அலங்கரிக்கப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி 103 தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினர் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர் இரா.சேதுநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநிலத் தீர்மானக் குழு துணைத் தலைவர் டாக்டர் இரா மாசிலாமணி மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் ஒன்றியவை தலைவர் ஆர் சுப்பிரமணி ஒன்றிய துணைச் செயலாளர் இந்திரா சுரேஷ் செல்வகுமார் இன்றைய பொருளாளர் ஆறுமுகம்

மாவட்ட கழக பிரதிநிதிகள் கே விஜயன் இ.சசிகுமார், கோபாலகிருஷ்ணன் மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே எஸ் அன்சாரி, செந்தில்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.குமார்,

விநாயகபுரம் சங்கர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வெற்றிச் செல்வன், துணை அமைப்பாளர்கள் சு வெங்கடேஷ், ஆனந்தராஜ், சதாம் உசேன், ஒன்றிய விவசாய அணி கார்த்திகேயன், ஒன்றிய தொண்டரணி சுந்தர்ராஜன், ஒன்றிய இலக்கிய அணி சந்திரசேகர், கிளைச் செயலாளர்கள் டீக்கடை குமார், ஸ்டாலின், சகாதேவன் , அகில்வாணன், ரவி, பூக்கடை அருள், சக்திவேல் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்

